**<u>சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி</u>**

முன்னிலை: திரு.R. பாரதிராஜா, பி.ஏ., பி.எல்.,
சார்பு நீதிபதி, உசிலம்பட்டி
2026-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 28-ம் நாள் வெள்ளிக்கிழமை

**<u>அசல் வழக்கு எண்.25/2025 [CNR No.TNMD240000532025]</u>**

கனரா வங்கி உசிலம்பட்டி,
அதன் கிளை தலைமை மேலாளர் மூலம் .......வாதி

/ எதிர் /

கனிபிரியா .......பிரதிவாதி

இந்த வழக்கு இந்நீதிமன்றம் முன்பு 24.08.2026 அன்று இறுதியாக விசாரணைக்கு வந்த போது வாதி தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.S.கணபதி அவர்களும், பிரதிவாதி தரப்பில் அழைப்பாணை அனுப்பி அழைத்தும் ஆஜராகாததால் அவர்கள் தோன்றாத்தரப்பினராக கருதப்பட்டு வழக்கு ஆவணங்கள் மற்றும் சாட்சியங்கள் பரிசீலிக்கப்பட்டு இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும் ஒருதலைப்பட்ச......

**<u>தீர்ப்புரை</u>**

இவ்வழக்கானது, பிரதிவாதி வாதியின் வங்கிக்கு பிராது தொகை ரூ.2,27,644/- செலுத்தக் கோரியும், மேற்படி தொகைக்கு வழக்கு தாக்கல் செய்த தேதியிலிருந்து தொகை செலுத்தி முடிக்கும் தேதி வரை வருட 13.5% பின் வட்டி வீதம் திரும்ப செலுத்தக் கோரியும், வழக்கின் செலவுத் தொகை கோரியும் பிரதிவாதி மீது தாக்கல் செய்யப்பட்ட வழக்காகும்.

**2) வாதி வழக்குரையின் சுருக்கம்:–**

i) வாதி வங்கியில் பிரதிவாதிகள் கடந்த 19.09.2011ம் தேதி ரூ.90,000 பால்மாடு கடன் பெற விண்ணப்பித்தார். மேற்படி விண்ணம் உரிய ஆய்வுக்கு பின் 19.09.2011ம் தேதியில் கடன் வழங்கல் கடிதம் எழுதிக் கொடுத்தார். பிரதிவாதி கடன் தொகையை குறைந்தபட்ச வட்டியாக 13.5% வட்டியுடன் திருப்பி செலுத்துவதாக கூறி கொதுவை ஒப்பந்தம் எழுதிக் கொடுத்தார். பிரதிவாதி வாதி வங்கிக்கு ஆவணங்கள் நிறைவேற்றுதல் கடிதம் எழுதிக்கொடுத்தார். மேற்படி கடனை 60 மாத தவணைகளில் திருப்பி செலுத்துவதாக ஒப்புக்கொண்டார். ஆனால் பிரதிவாதி ஒப்புக்கொண்டபடி பிரதிவாதி கடனைத் திரும்ப செலுத்த முன்வரவில்லை. பிரதிவாதி 30.06.2014, 08.12.2016, 21.12.2018, 15.06.2021 மற்றும் 30.03.2023 ஆகிய தேதிகளில் வாதி வங்கிக்கு கடன் உயிரூட்டுக்கடிதங்கள் எழுதிக் கொடுத்தார். பிரதிவாதியின் வங்கிக்கணக்கு எண்.1022800027553 என்றும், பிரதிவாதி ஒப்புக்கொண்டபடி கடன் தொகையை முறையாக செலுத்தவில்லை என்றும், எனவே, வாதி வங்கி கணக்குபடி பிரதிவாதியின் கடன் கணக்கில் 05.01.2025 தேதிப்படி ரூ.2,25,761 பாக்கி உள்ளது என்றும், பிரதிவாதி வாதிக்கு வங்கிக்கு கடன் தொகை அசல் மற்றும் வட்டியை வழக்கு தாக்கல் செய்த தேதியிலிருந்து தொகை செலுத்தி முடிக்கும் தேதி வரை 13.50% பின்வட்டிவீதம் திருப்பிச் செலுத்த வேண்டும் எனக்கோரி வாதி வங்கியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. வாதி தரப்பில் வாதி வா.சா.1ஆக விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.10 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

4. பிரதிவாதி தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய அழைத்தும் ஆஜராகாததால் அவர் தரப்பு ஒருதலைபட்சமாகக்கப்பட்டது.

**5. தீர்வுக்குரிய பிரச்சனை:**

வாதி வங்கி கோரிய பரிகாரம் வாதி வங்கிக்கு கிடைக்கத்தக்கதா? அல்லது இல்லையா?

**6. தீர்வு:**

6(1) வாதி வங்கி தரப்பில் வாதி வங்கி பிரதிவாதிக்கு 19.09.2011ம் தேதி வாதி வங்கியில் ரூ.90,000 கடன்கோரி விண்ணப்பித்து, பிரதிவாதி கடன் தொகையை குறைந்தபட்ச வட்டியாக 13.50% வட்டியுடன் மாதத்திற்கு ஒருமுறை கூடும் கூட்டுவட்டியுடன் 60 மாதத் தவணைகளில் செலுத்துவதாக ஒப்புக்கொண்டு கடனுக்கு ஆதரவாக பிரதிவாதி 19.09.2011 அன்று வாதி வங்கிக்கு கொதுவை ஒப்பந்தம் ஒன்று எழுதிக் கொடுத்தார் என்றும், வாதி வங்கி பிரதிவாதிக்கு கடன்தொகை ரூ.90,000யை 19.09.2011ம் தேதி வழங்கியது என்றும், வாதி வங்கி பலமுறை கேட்டும் கடன்பாக்கியைப் பிரதிவாதி திருப்பி செலுத்தாததால் பிரதிவாதி கடன்பாக்கியைத் திரும்ப செலுத்த கடமைப்பட்டவர் என்றும் முன்வைக்கப்பட்டுள்ளது.

6(2) பிரதிவாதி வழக்கில் தோன்றா தரப்பினராக இருந்து வாதி தரப்பு கட்சியை மறுக்கவில்லை. மறுக்கப்படாத சங்கதிகள் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதியாகவே கருதத்தக்கது என்ற இந்திய சாட்சிய சட்டப்பிரிவு 58ல் கண்டவாறு இவ்வழக்கில் பிரதிவாதிகள் வாதி தரப்பு வழக்கை ஒப்புக்கொள்வதாகவே அனுமானிக்க இயலுகிறது.

6(3) இருப்பினும், இவ்வழக்கில் வாதி வங்கி தரப்பில் வங்கி மேலாளர் வா.சா.1ஆக விசாரணை செய்யப்பட்டு பிராது சங்கதிகளுக்கு ஆதரவாக முதல் விசாரணை சாட்சியமளித்து 19.09.2011ம் தேதிய பிரதிவாதி எழுதிக்கொடுத்த கடன் விண்ணப்பம் அசல் வா.சா.ஆ.1ஆகவும், 19.09.2011ம் தேதிய பிரதிவாதி

எழுதிக்கொடுத்த கடன் வழங்கல் கடிதம் அசல் வா.சா.ஆ.2ஆகவும், 19.09.2011ம் தேதிய பிரதிவாதி எழுதிக்கொடுத்த கொதுவை ஒப்பந்தம் அசல் வா.சா.ஆ.3ஆகவும், 19.09.2011ம் தேதிய ஆவணங்கள் நிறைவேற்றுதல் கடிதம் அசல் வா.சா.ஆ.4ஆகவும், 30.06.2014ம் தேதிய உயிருட்டுக்கடிதம் அசல் வா.சா.ஆ.5ஆகவும், 08.12.2016ம் தேதிய உயிருட்டுக்கடிதம் அசல் வா.சா.ஆ.6ஆகவும், 21.12.2018ம் தேதிய உயிருட்டுக்கடிதம் அசல் வா.சா.ஆ.7ஆகவும், 15.06.2021ம் தேதிய உயிருட்டுக்கடிதம் அசல் வா.சா.ஆ.8ஆகவும், 30.03.2023ம் தேதிய உயிருட்டுக்கடிதம் அசல் வா.சா.ஆ.9ஆகவும், 10.01.2025ம் தேதிய பிரதிவாதியின் கடன் கணக்குபட்டியல் அலுவலக நகல் வா.சா.ஆ.10ஆகவும் சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6(4) எனவே, மேற்கண்ட சாட்சி மற்றும் சான்றாவணங்கள் கவனமுடன் பரிசீலித்ததில் பிராது சங்கதிகளுக்கு உறுதிபடுத்தும் விதமாகவே உள்ளது. எனவே, வாதி வங்கி தரப்பில் இவ்வழக்கு நிரூபிக்கப்பட்டுள்ளது என்பதால் வாதி வங்கி கோரியபடி வாதி வங்கியின் வழக்கு செலவுத் தொகையுடன் அனுமதிக்கத்தக்கது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

இறுதியாக, வாதி வங்கியின் வழக்கு செலவு தொகையுடன் அனுமதிக்கப்பட்டு, பிரதிவாதி வாதி வங்கிக்கு பிராது தொகை ரூ.2,27,644/- செலுத்த வேண்டும் என்றும், மேற்படி தொகைக்கு வழக்கு தாக்கல் செய்த தேதியிலிருந்து தொகை செலுத்தி முடிக்கும் தேதிவரை வருடம் 13.5% வட்டிவீதம் திரும்ப செலுத்த வேண்டும் என்றும் இந்நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால்

பிழைநீக்கம் மேற்கொண்டு இன்று 2026–ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 28–ம் நாள் அவையறியப் பகரப்பட்டது.

RENGANATHAN BARATHIRAJA
Digitally signed by RENGANATHAN BARATHIRAJA
Date: 2026.08.28 23:15:46 +0530

சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி.

**<u>வாதி தரப்பு சாட்சி :–</u>**

வா.சா.1 சந்திரமோகன்

**<u>வாதி தரப்பு சான்றாவணம்:–</u>**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 19.09.2011 | பிரதிவாதி எழுதிக்கொடுத்த கடன் விண்ணப்பம் அசல் |
| வா.சா.ஆ.2 | 19.09.2011 | பிரதிவாதி எழுதிக்கொடுத்த கடன் வழங்கல் கடிதம் அசல் |
| வா.சா.ஆ.3 | 19.09.2011 | பிரதிவாதி எழுதிக்கொடுத்த கொதுவை ஒப்பந்தம் அசல் |
| வா.சா.ஆ.4 | 19.09.2011 | ஆவணங்கள் நிறைவேற்றுதல் கடிதம் அசல் |
| வா.சா.ஆ.5 | 30.06.2014 | உயிருட்டுக்கடிதம் அசல் |
| வா.சா.ஆ.6 | 08.12.2016 | உயிருட்டுக்கடிதம் அசல் |
| வா.சா.ஆ.7 | 21.12.2018 | உயிருட்டுக்கடிதம் அசல் |
| வா.சா.ஆ.8 | 15.06.2021 | உயிருட்டுக்கடிதம் அசல் |
| வா.சா.ஆ.9 | 30.03.2023 | உயிருட்டுக்கடிதம் அசல் |
| வா.சா.ஆ.10 | 10.01.2025 | பிரதிவாதியின் கடன் கணக்குபட்டியல் அலுவலக நகல் |

**<u>பிரதிவாதி தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:–</u>**

–– இல்லை ––

RENGANATHAN BARATHIRAJA
Digitally signed by RENGANATHAN BARATHIRAJA
Date: 2026.08.28 23:15:52 +0530

சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி.

சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி.
அசல் வழக்கு எண்.25/2025
வரைவு / சீரான / தீர்ப்புரை
நாள்:– 28.08.2026.

**சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி.**
**அசல் வழக்கு எண். 25/2025**
**நாள்:– 28.08.2026**

தீர்ப்பு பகரப்பட்டது. இறுதியாக, வாதி வங்கியின் வழக்கு செலவு தொகையுடன் அனுமதிக்கப்பட்டு, பிரதிவாதி வாதி வங்கிக்கு பிராது தொகை ரூ.2,27,644/– செலுத்த வேண்டும் என்றும், மேற்படி தொகைக்கு வழக்கு தாக்கல் செய்த தேதியிலிருந்து தொகை செலுத்தி முடிக்கும் தேதிவரை வருடம் 13.5% வட்டிவீதம் திரும்ப செலுத்த வேண்டும் என்றும் இந்நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்படுகிறது. விரிவான தீர்ப்பு தனித்தாளில் உள்ளது.

**சார்பு நீதிபதி,**
**உசிலம்பட்டி.**